# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 82/2024** **Date:07.04.2026.**

**(PW1)- பிரவின் ராம்**

<u>**3** முதல் **6** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் நான் என்னுடைய அம்மா மற்றும் பெரியம்மாவிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் சொல்லி கொடுத்ததன் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் 31.12.2020 தேதியிட்ட பாகபத்திரம் செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1,, 2 பிரதிவாதிகள் இரணியல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விலைபத்திரம் ஆவண எண் 5289/2020 அடிப்படையில் 3 முதல் 5 பிரதிவாதிகள் இடத்தில் தனி பட்டா வேண்டி மனு செய்தார்கள் என்றால் சரிதான்.

2. 3 முதல் 5 பிரதிவாதிகள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் தாவா சொத்தை அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் ஒரு சொத்தின் மனு செய்த நபருக்கு உரிமை இருக்கிறதா என்பதை பார்த்துதான் அளவீடு செய்வார்கள் என்றால் சரிதான், ஆனால் அது மோசடி பத்திரமாகும். 3 முதல் 5 பிரதிவாதிகள் சட்டப்படி தான் தாவா சொத்தில் அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் 1, 2 பிரதிவாதிகளுக்கு சாதகமாக 3 முதல் 5 பிரதிவாதிகள் நடந்துகொண்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எனவே 3 முதல் 5 பிரதிவாதிகள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றாலும் சரியல்ல.

(**ஒப்பம்**)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**,

**இரணியல்**.